**உடுதும்பர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 மே 26 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் உடுதும்பர பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். | 2020 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது திருத்துவதாக அறிவிக்கிறேன். |
| (ii) | மீமுரே சனசமூக நிலையம் அமைந்துள்ள காணி ரூபா 260,000 ஆக மற்றும் ரூபா 948,367 ஆக இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். | 2020 ஆண்டின் இறுதிக் கணக்குகளில் திருத்துவதாக அறிவிக்கிறேன். |
| (iii) | மீளாய்விற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். | 2020 ஆண்டின் இறுதிக் கணக்குகளில் திருத்துவதாக அறிவிக்கிறேன். |

(ஆ) **இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் கூட்டுத் தொகை ரூபா 9,150,891 ஆன 2 கணக்கு விடயங்களிற்குரிய மீதிகள் மற்றும் உபயோகப் பதிவேடுகளில் காட்டப்படும் மீதிகளிற்கிடையில், ரூபா 250,100 வேறுபாடு ஆனது. | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். | சில மீதிகள் அட்டவணையில் உள்ளதாக மற்றும் 2020 கணக்குகள் தயாரிக்கையில் சரி செய்வதாக அறிவிக்கிறேன். |

(இ) **எதிர்பாரா பொறுப்புக்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதியன்று சபைக்கு எதிராக 7 வெளித்தரப்பினரால் மற்றும் 9 வெளித்தரப்பினருக்கு எதிராக சபையினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், அது தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்பாரா பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | 2020 ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரி செய்வதாக அறிவிக்கிறேன். |

(ஈ) **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | பெற வேண்டிய கணக்கு மீதி கூட்டுத் தொகையில் ஆண்டு 1 – 5 இற்கு இடைப்பட்ட காலத்தை விஞ்சியிருந்த ரூபா 343,113 மற்றும் 5 ஆண்டுகளிற்கு அதிக காலத்தை விஞ்சிய ரூபா 1,475,305 ஆன மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தன. | பெற வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுத்தல். | 2012 ஆண்டு முதல் பெற வேண்டிய கருத்திட்ட தொகை ஆனதுடன். அறவிட முடியுமான சாத்தியப்பாட்டை விசாரித்து அறிந்து அறவிட முடியாத தொகையை பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதி திகதியன்று வேலை கடன்கொடுனர் மீதியின் பெறுமதி ரூபா 31,901,551 ஆனதுடன் அம் மீதியில் உள்ளடங்கிய 5 ஆண்டுகளை விஞ்சிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,700,665 உம் ஆண்டு 1 – 5 இடையிலான மீதிகளின் பெறுமதி ரூபா 623,435 உம் ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இத் தொகையில் செலுத்த தேவையற்ற ரூபா 1,054,315 ஆன தொகையை பதிவழிக்க மகா சபையில் அங்கீகாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

(உ) **கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகளின்மை**

| | | |
|---|---|---|
| பெறுமதி ரூபா 139,735,986 ஆன காணிகளிற்குரிய உரித்து உறுதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | மதிப்பீட்டின் பின்னர் உறுதிகளை தயார் செய்து கணக்காய்விற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 2015 மார்ச் 26 திகதிய 07/2015 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை. | தவிசாளர் உள்ளிட்ட 15 அங்கத்தவர்களுக்கு விழா முற்பணம் ரூபா 300,000 செலுத்தப்பட்டிருந்தது. | மேற் குறித்த சுற்றறிக்கையின் படி விழா முற்பணம் அரச ஊழியர்களுக்கு மாத்திரமே செலுத்த முடியும். | இத் தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) 2012 செப்டம்பர் 5 திகதிய என்பி/ஆர்ரீசீ/ரீஆர்/சீஎம்/12/07 இலக்க முச்சக்கர வண்டி சேவையை ஒழுங்கமைப்பதற்காக வேலைத் திட்டமொன்றை அறிமுகம் செய்தல் எனும் அமைச்சரவை விஞ்ஞாபனம். | முச்சக்கர வண்டி சேவையை ஒழுங்கமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முச்சக்கர வண்டி சேவையை ஒழுங்கமைத்து கட்டணம் அறவிட வேண்டும். | முச்சக்கர வண்டி சேவையை ஒழுங்கமைக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 52,082,077 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 2,864,707 ஆனது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 பில் போடப்பட்ட வருமானம் | 2019 சேர்க்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம | 2018 பில் போடப்பட்ட வருமானம | 2018 சேர்க்கப்பட்ட வருமானம | 2018 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 2,300,800 | 2,224,875 | 2,088,887 | 399,099 | 1,322,000 | 650,604 | 1,518,749 | 466,760 |
| (ii) | வாடகை | 2,933,000 | 2,964,035 | 2,075,420 | 880,352 | 2,115,000 | 2,981,952 | 1,963,040 | 125,000 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 471,000 | 503,000 | 348,100 | 338,200 | 890,000 | 1,149,950 | 1,166,200 | 411,900 |
| (iv) | ஏனைய வருமானம் | 3,941,900 | 5,978,390 | 1,505,157 | 3,251,713 | 36,582,279 | 2,013,807 | 2,286,897 | 141,030 |
| | | 9,646,700 | 11,670,300 | 6,017,564 | 4,869,364 | 40,909,279 | 6,796,313 | 6,934,886 | 1,144,690 |

### 2.2.2 நீர்க் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை நீர் நுகர்வோர்களின் நீர் கட்டண நிலுவை ரூபா 544,661 ஆனது. | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 841,938 ஆன நிலுவையிலிருந்து ரூபா 297,277 தொகை தற்போது அறவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

### 2.2.3 ஏனைய வருமானம்.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| டெக்டரிலிருந்து மற்றும் பவுசரை வாடகைக்கு வழங்கியதில் 05 வருட காலமாக அறவிடப்படாது காணப்படும் ரூபா 48,451 ஆன மீதி நிலவியது. | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை தொகை அறவிடப்பட வேண்டிய தரப்பினர் அறிவூட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 35,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 3,796,394 ஆனது. | குறித்த பணத்தை சபைக்கு அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிரைவேற்ற உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதும் 04 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | உப விதிகள் விதித்து வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன் ஏற்பாடுகளை செய்ய குறித்துக் கொண்டதாக அறிவிக்கிறேன். |

### (ஆ) எதிர்பார்த்த விளைவுகளை (out come) பெற்றுக் கொள்ளாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | புரநெகும கருத்திட்டத்திலிருந்து ரூபா 42,160,398 செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஹுன்னஸ்கிரிய பலநோக்கு கட்டிடத்தில் 4870 வருக்க அடி அளவு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களிலிருந்து எதிர்பார்த்த பலனை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமான ஈட்டுதளுக்கு நடவடிக்கை எடுத்த போதும் அது தோல்வியுற்றது. மீண்டும் டென்டர் செய்து வழங்க தீர்மானித்துள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ii) | புரநெகும கருத்திட்டத்திலிருந்து ரூபா 57,130,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட உடுதும்பர நீர் உத்தேச திட்டத்திலிருந்து 320 நீர் | நீர் விநியோகங்களை திட்டமிட்டு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 193 நீர் விநியோகங்கள் வழங்கப்பட்டுள்ளன. நீர் கொள்ளளவை |

| | | | |
|---|---|---|---|
| | விநியோகங்களை வழங்குவதை நோக்கமாக கொண்டிருந்த போதும் 175 விநியோகங்களை வழங்கி பொருத்தப்படாத 145 நீர் மாணிகளை பிரதேச சபைக்கு வழங்கியிருந்தது. | | கவனத்திற் கொண்டு மீதி நீர் வினியோகங்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (iii) | 2019 ஆண்டில் கிராமசக்தி கிராமங்களில் அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் கழுன்தென்ன வித்தியாலய அருகில் குழாய் கிணறு நிர்மாணிக்க ரூபா 1,078,000 செலவிடப்பட்ட போதும், பயன்பாட்டாளர்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்பாட்டாளர்களுக்கு விளைவுகளை வழங்க வேண்டும். | இவ் அபிவிருத்தி உத்தேசத்தின் பணத்தை வரவழைத்துக் கொள்ள பட்டியல் தயாரிக்கப்பட்டதுடன், கொடுப்பனவு செய்கையில் பரிசீலித்து கொடுப்பனவு செய்வதாக அறிவிக்கிறேன். |
| (iv) | 2019 ஆண்டில் கிராம எழுச்சி – துரித கிராம அபிவிருத்தி வேலை திட்டத்தின் கீழ் பம்பரபெத்த கிழக்கு, பம்பரபெத்த நீர் உத்தேசத் திட்ட அபிவிருத்திக்காக ரூபா 474,750 தொகைக்கு வேலை பூர்த்தி செய்யப்பட்டு கொடுப்னவு செய்யப்பட்டிருந்த போதும் திட்டத்தின் பலவீனம் காரணமாக பயன்பாட்டாளர்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை | கருத்திட்டத்தினூடாக நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |
| (v) | 2019 ஆண்டில் கிராம எழுச்சி – துரித கிராம அபிவிருத்தி வேலை திட்டத்தின் கீழ் பம்பரபெத்த கிழக்கு, பம்பரபெத்த தேவின்னேகம குழாய் நீர் உத்தேச திட்டத்திற்காக ரூபா 1,355,307 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்நீர் உத்தேசத் திட்ட பரிசோதனையின் போது, நீர் பம்பியிலிருந்து தாங்கியிற்கு புதைத்திருந்த குழாய்களை அகற்றி தனி வீட்டிற்கு நீர் விநியோகம் வழங்கப்பட்டிருந்ததுடன், பிரஜைகளுக்கு நீர் வழங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

(இ) **கைவிட்பபட்ட செயற்பாடுகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2019 ஆண்டில் கிராமசக்தி கிராமங்களில் அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் பொப்பிடிய ஸ்ரீ அபினவாராம விஹாரயில் புதிய பிக்குகள் வதிவிடத்தை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் 03 வேலை விடயங்களின் கீழ் கூரைக்காக 0.47 மில்லி மீட்டர் தடிப்பிலான அழுமிலியம் தகடு வழங்கி பொருத்த 324.48 கன மீட்டர்களிற்காக ஒரு கன மீட்டர் ரூபா 2,216 வீதம் ரூபா 719,047 தொகைக்காக பட்டியல் அங்கீகரிக்கப்பட்ட போதும், அவ்வேலை விடயம் மேற்கொள்ளப்படவில்லை. ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படாததுடன், பணம் கிடைக்கும் அபாய நிலமையின் மீது கைவிடப்பட்டிருந்தது. | மதிப்பீட்டின் பிரகாரம் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்து ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவ் அபிவிருத்தி உத்தேசத்தின் பணத்தை வரவழைத்துக் கொள்ள பட்டியலகள் தயாரிக்கப்பட்டதுடன், கொடுப்பனவு செய்யும் போது பரீட்சித்து கொடுப்பனவு செய்வதாக அறிவிக்கிறேன். |

(ஈ) **கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கொவுல்கம கொம்போஸ்ட் கொட்டிலொன்றை நிருவி கொம்போஸ்ட் அகழி மற்றும் களஞ்சியத்திற்காக 2010 ஆண்டில் ரூபா 3,487,828 தொகையும், மீளாய்வாண்டில் ரூபா 1,552,606 தொகையும், இயந்திர உபகரணங்கள் கொள்வனவிற்கு 2012 - 2017 ஆண்டுகளில் ரூபா 5,069,140 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதும் கருத்திட்டமும் தோல்வி நிலையில் காணப்பட்டது. | கழிவு பொருள் முகாமைத்துவத்தை ஒழுங்கமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொம்போஸ்ட் உற்பத்தி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

(உ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்க இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள போதியளவு கடமைப்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட வரவு செலவு திட்டத்தை 2021 ஆண்டில் தயாரிப்பதாக அறிவிக்கிறேன். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை | | |
| 12 பதவிகளிற்குரிய ஊழியர் வெற்றிடங்கள் 22 ஆனது. | ஊழியர் வெற்றிடங்களை நிரப்பிக்கொள்ள வெண்டும். | நியமிக்க நடவடிக்கை எடுத்து அறிக்கை செய்வதாக அறிவிக்கிறேன். |

**3.3 செயற்பாட்டு செயற்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மாணிகள் பொருத்தப்படாத 207 வாடிக்கையாளர்களிடமிருந்து மற்றும் செயலற்ற 69 வாடிக்கையாளர்களிடமிருந்து நிலையான கட்டணமாக வீட்டு பாவனைக்காக ரூபா 150 உம் அரச நிறுவனங்கள் மற்றும் வியாபார நிறுவனங்களிற்காக ரூபா 200 உம் அறவிடப்படுவதால் சபைக்கு கிடைக்க வேண்டிய சரியான வருமானம் இழக்கப்பட்டுள்ளது. | நீர் மாணிகளை பொருத்தி வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீர் மாணிகளை பொருத்த நடவடிக்கை எடுத்து குறித்த அறவீடுகளின் சுழற்சியின் பிரகாரம் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2019 ஆண்டில் குறை வருமான குடும்பங்களிற்கு சீமெந்து வழங்க ரூபா 723,795 செலவிடப்பட்டிருந்தது. இங்கு இரண்டு பயன்பாட்டாளர்களுக்கு ரூபா 13,370 பெறுமதியான 14 சீமேந்து மூட்டைகள் வழங்கப்பட்டிருக்காததுடன், மூன்று பயன்பாட்டாளர்களுக்கு ரூபா 5,730 | அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் பண்ட அன்பளிப்புக்களை வழங்கி பின்னூட்டல் செய்யப்பட வேண்டும். | 566 சீமேந்து மூட்டைகள் பகிரப்பட்டதுடன் அவற்றில் பெறுமளவு தொகையை களஞ்சியப்படுத்த களஞ்சிய வசதிகள் இல்லாததால் ஹாட்வெயார் ஒன்றினூடாக விநியோகிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நேரடியாக மேற்பார்வை செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான 6 சீமேந்து மூட்டைகள் குறைவாக வழங்கப்பட்டிருந்தன. ரூபா 39,105 பெறுமதியான 36 சீமேந்து மூட்டைகள் வழங்கப்பட்ட 6 பயன்பாட்டாளர்கள் கருத்திட்ட நோக்கத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.4 சொத்துக்கள் முகாமைதுவம்**

**3.4.1 சொத்துக்களிலிருந்து பெற வேண்டிய வருமானம் பெறப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆண்டில் சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 25,616,323 பெறுமதியான வாகனம் மற்றும் 2 இயந்திர உபகரணங்கள் பயன்படுத்தப்படவில்லை. | இவ் இயந்திர உபகரணங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்வியந்திரத்திற்கு நடத்துனர் ஆட்சேர்க்கப்பட்ட பின் வருமானம் ஈட்டும் செயற்பாட்டில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | திஸ்ஸஅத்த நாயக கேட்போர் கூடம் 2017 மற்றும் 2019 ஆண்டுகளில் ரூபா 52 மில்லியன் செலவில் பழுதுபார்க்கப்பட்ட போதும் பயன்பாடு மிகக் குறைந்த மட்டத்தில் நிலவியது. | இக் கேட்போர் கூட பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேசத்தில் காணப்படும் கேள்வியின் அளவின் பிரகாரம் பயன்பாட்டின் அளவு குறைந்த மட்டத்திலுள்ளது. நலன்புரி நடவடிக்கைகளுக்கு இலவசமாக வழங்கும் சந்தர்ப்பங்களும் உள்ளன. |

**3.4.2 விளைவற்ற/குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான டெக்டர் வண்டி விளைவற்று சபை வளவில் நிறுத்தப்பட்டிருந்தது. | ஏலத்திற்கு விட வேண்டிய சொத்துக்களை ஏலத்திற்கு விட நடவடிக்கை எடுக்க வேண்டும். | விளைவற்ற சொத்துக்கள் ஏலவிற்பனை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கிறேன். |

## 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான இரண்டு வாகனங்களை ஏலத்திற்குவிட குறைந்தபட்ச விலையை அறிவித்து டென்டர் அறிவித்தல் பிரசுறிக்காததால் இரண்டு முறை டென்டர் செய்யப்பட்ட காரணத்தால் சபைக்கு ரூபா 91,494 ஆன நட்டம் ஏற்பட்டுள்ளது. | சபை நிதியத்திற்கு நட்டம் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறைந்தபட்ச விலை மனு அறிவித்தலினூடாக கோரப்படும் பெறுமானம் குறையக்கூடும் ஆகையால் குறைந்தபட்ச விலை மனு குறிப்பிடவில்லை என அறிவிக்கிறேன். |